**பாலிந்தநுவர பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஏப்ரல் 01 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 நவம்பர் 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தின் காரணமாக கணக்காய்வுக்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பாலிந்தநுவர பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலையை வெளிப்படுத்தியிருக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இல. 2 இன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களுடன் காசுப்பாய்ச்சற் கூற்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 செப்தெம்பர் 14 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டிருந்த 03 சிறுவர் நூலக மேசைகள், 20 சிறுவர் நூலக கதிரைகள் மற்றும் 01 பத்திரிகை பதாகையின் பெறுமதி முறையே ரூபா 16,500 தொகையும் ரூபா 29,000 தொகையுமாக ரூபா 14,650 ஆக ரூபா 60,150 கூட்டுத்தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் போது ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 378,619 தொகையான கடன்கொடுத்தோருக்காக 2013 ஆம் ஆண்டின் போதும் மீண்டும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்தமையால் ஆண்டின் செலவினமும் கடன்கொடுத்தோர் மீதியும் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 06 கைத்தொழில் செயற்திட்டங்களுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவினமாக ரூபா 2,862,419 கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 2,095,613 தொகையானமையால் மீளாய்வாண்டின் செலவினமும் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 766,806 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) கலாச்சார விழாவிற்காக 3 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 94,960 தொகையான முற்பணம் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி தீர்க்கப்பட்டிருந்த போதிலும் இதற்குரித்தான செலவினம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திடமிருந்து கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 3,178,457 தொகையான கப் வண்டியின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டின் இறுதியில் அகலவத்தை பிரதேச சபையின் பெயரிலான கடன்கொடுத்தோர் கணக்கின் மீதி ரூபா 6,862,871 தொகையான போதிலும், மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இது ரூபா 8,862,871 ஆக பேரேட்டுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்கொடுத்தோர் மீதி ரூபா 2,000,000 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மாதாந்த ஒருங்கிணைந்த பெறுவனவுப் பொழிப்பின் படி, கைத்தொழில் முற்பணப் பெறுவனவான ரூபா 2,737,000 தொகையும் ஒருங்கிணைந்த செலவினப் பொழிப்பின் படி, கைத்தொழில் முற்பணக் கொடுப்பனவான ரூபா 2,060,000 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப் பதிவுகள் எந்தக் கணக்கிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,388,534 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,499,615 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 1,111,081 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | -------------------- | ------------- | -------------- | -------------- |
| | | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| (i) | வீதவரியும் வரியும் | 2,511 | 2,191 | 348 |
| (ii) | வாடகை | 3,636 | 2,357 | 279 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 178 | 178 | -- |

**2:2:2 குத்தகை**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான குத்தகை மீதி ரூபா 258,463 தொகையானதுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஞாயிற்றுக்கிழமைச் சந்தை குத்தகைக்கிடப்படுவதற்குரித்தான உடன்படிக்கையின் நிபந்தனையின் பிரகாரம், மாதாந்த வருடாந்தக் கொடுப்பனவுகள் தாமதமாகும் ஒரு நாளுக்காக ஒவ்வொரு ஆயிரம் ரூபாவிற்கும் ரூபா 5 படியான மேலதிகத் தண்டப்பணமும் மாதத்திற்கு மேலான காலமாக பணம் செலுத்தத் தவறியிருப்பின் எவ்வித அறிவித்தலுமின்றி குத்தகையை இரத்துச் செய்ய வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் காலத்திற்காக 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 390,744 தொகை தண்டப்பணமாக குத்தகையாளரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய போதிலும் தாமதக் கட்டணமாக ரூபா 34,400 தொகை மாத்திரம் பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு முறையான விதத்தில் சந்தைக் குத்தகை செலுத்தப்பட்டிராத போதிலும் குத்தகையாளரால் தடையின்றி ஞாயிறு சந்தையின் வரி அறவிடப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

**2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 2,555,157 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,231,587 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2013 அமைச்சரவை ஏற்பாட்டின் கீழ் நானாவித விவசாயிகளின் அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கு வழங்கப்படுவதற்காக ஒவ்வொன்றும் ரூபா 880 படி 1360 கதிரைகள் ரூபா 1,196,800 செலுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.
இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, ரூபா 1,196,800 தொகையான இக் கொள்வனவிற்காக அமைச்சரின் முழு அங்கீகாரமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 ஏப்ரல் 03 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 598,400 பெறுமதியான 680 கதிரைகள் பொருட் பதிவேட்டின் படி 2013 ஏப்ரல் 07 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த போதிலும் அவற்றைப் பொறுப்பேற்ற நபர் குறிப்பிடப்படாது சபை உறுப்பினர்ளின் கோரிக்கையின் படி, குறித்த சங்கங்களுக்கு வழங்கப்பட்டதாக மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. மேலும் 2013 திசெம்பர் 06 ஆம் திகதி சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த 680 கதிரைகளில் 200 கதிரைகள் வழங்கப்பட்டிருந்ததுடன் இதற்காக மாத்திரம் பொருட்கள் பெற்றுக்கொள்ளப்பட்டவர்களால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்வுத் தினமாகிய 2014 யூன் 28 ஆம் திகதிய பதிவேட்டின் படி விநியோகிக்கப்படாத 480 கதிரைகளில் 280 கதிரைகளின் இருப்பு பௌதீக மெய்மையாய்வின் போது அவதானிக்கப்பட்டதுடன் எஞ்சிய 200 கதிரைகள் தொடர்பாக எவ்வித தகவலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

#### (அ) ஹெடிகல்ல குடியில் இறப்பர் பண்படுத்தல் நிலையமொன்றை நிர்மாணித்தல்

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் துருசவிய நிதியத்தின் மூலம் மேற்குறித்த கைத்தொழிலுக்காக 2012 யூன் 15 ஆம் திகதி ரூபா 1,200,000 தொகையான ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஹெடிகல்ல குடியில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இச் சமூக அமைப்பு நிலையத்திற்காக ரூபா 1,007,920 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பிரதேச சபையின் கண்காணிப்பின் கீழ் மேற்கொள்ளப்படுவதற்கான ஒப்பந்தம் ஹெடிகல்ல குடியின் துருசவிய அமைப்பிற்கு வழங்கப்பட்டிருந்தது. இவ் இறப்பர் பண்படுத்தல் நிலையம், (2014 யூன் 30 ஆம் திகதி சபையின் கைத்தொழில் உத்தியோகத்தருடன்) தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பிரதான வீதியிலிருந்து கட்டிடம் வரையான வீதியை அமைப்பதற்கு டோஸர் இயந்திரம் பயன்படுத்தப்பட்டு தடையாக உள்ள மரங்களை அகற்றுவதற்குப் பதிலாக மீற்றர் மணித்தியாலம் ஒன்றிற்கு ரூபா 2,500 படி 10 மணித்தியாலங்களுக்காக ரூபா 25,000 மதிப்பிடப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 08 ஆம் திகதிய தொழில்நுட்ப உத்தியோகத்தரின் இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, மேற்குறித்த செயற்பாட்டிற்காக 22 மீற்றர் மணித்தியாலங்களுக்காக ரூபா 55,000

பரிந்துரைக்கப்பட்டு மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கு மேலாக ரூபா 30,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் விடய இல. 05 இன் கீழ் சேதமாகியுள்ள அலுமினியம் கூரைத்தகடுகளுக்குப் பதிலாக 12 அடி நீளமான 15 அலுமினியம் கூரைத்தகடுகள் விநியோகிக்கப்படுவதற்காக ரூபா 3,000 படி ரூபா 45,000 தொகையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், மதிப்பீடு திருத்தப்படாது மதிப்பிடப்பட்ட கூரைத்தகடுகளின் எண்ணிக்கைக்கும் மேலாக கொள்வனவு செய்யப்படுவதற்கான தேவைப்பாடு குறிப்பிடப்படாது 30 கூரைத்தகடுகளுக்காக ரூபா 90,000 தொகை செலுத்தப்பட்டிருந்தமையால் மதிப்பிடப்பட்ட செலவினத்திற்கும் மேலாக ரூபா 45,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஹெடிகல்ல குடியின் துருசவிய அமைப்பின் சமூக அமைப்பு நிலையல் புகைக்கூட மொன்றை நிர்மாணித்தல்

---

துருசவிய நிதியத்தினால் மேற்குறித்த இறப்பர் பதனீட்டு நிலையத்திற்குத் தேவையான புகை போக்கி நிர்மாணிப்புச் செயற்திட்டம் ரூபா 1,428,515 தொகையான உடன்படிக்கையிடப்பட்ட பிணைப்பிற்கு ஹெடிகல்ல குடியின் துருசவிய அமைப்பிற்கு 2013 மே 02 ஆம் திகதி வழங்கியிருந்தது. 2014 யூன் 30 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக மெய்மையாய்வின் போது பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

(i) 2013 ஏப்ரல் 26 ஆம் திகதி துருசவிய நிதியப் பணிப்பாளரால் 2 புகை போக்கிகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இறப்பர் ஆராய்ச்சி நிறுவகத்தின் பரிந்துரையின் படி, ஒரு புகை போக்கியை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை வழங்கப்பட்டிருந்ததுடன் இதன் படி எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபை அறிவுறுத்தப்பட்டிருந்தது. அவ் ஆலோசனையின் படி, செயற்படாது ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருந்த திட்டத்தின் படி 2 புகை போக்கிகளை புகை போக்கிகளை நிர்மாணித்திருந்தமை பௌதீக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) மதிப்பிடப்பட்ட விடய இல. 25 இன் படி, ட்டிராலிகளுக்கு கித்துள் கம்பங்கள் பொருத்தப்படுவதற்காக ரூபா 65,000 மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் பொருத்தப்பட வேண்டிய கித்துள் தூண்களின் எண்ணிக்கை எத்தனை என்பது குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், இறுதிக் கொடுப்பனவு அறிக்கையின் படி, ரூபா 65,000 தொகையான மொத்தத் தொகையும் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.3 காலாவதியான வைப்புக்கள்**

---

1997 முதல் 2011 வரையான காலப்பகுதிக்குரித்தான ரூபா 489,938 தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம் 571, 571(2) மற்றும் 571(3) இன் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 வாகனக் கட்டுப்பாடு

உள்ளூராட்சி அமைச்சால் 2008 சனவரி 11 ஆம் திகதி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,319,050 தொகையான கப் வண்டியின் மொத்த பழுதுபார்த்தலுக்காக 2013 பெப்ரவரி மாதத்தின் போது அதன் முகவர்களுக்கு வாகனம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 3 ½ மாதங்கள் கடந்ததை அடுத்து பழுதுபார்த்தலுக்குரித்தான ரூபா 564,582 தொகையான மதிப்பீடு கம்பனியால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. 2014 யூன் 30 ஆம் திகதி கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தின் போதும் குறித்த வாகனம் சபைக்குக் கொண்டுவரப்பட்டிராததுடன் செயலாளரால் அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது பழுதுபார்த்தற் செலவினம் அதிகரித்தமையால் அப் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாது ஏலவிற்பனை மேற்கொள்ளப்படுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர் வாய்மொழி அறிவுறுத்தல் வழங்கியதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஒரு வருடத்திற்கும் மேலான காலமாக வாகனம் சபைக்குக் கொண்டுவரப்பட்டு அதனை ஏலவிற்பனை செய்யப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையும் வேறு நிறுவகத்தில் வெயிலிலும் மழையிலும் தாக்கமுற்று உக்கலடைந்தமையால் வாகனத்தின் சந்தைப் பெறுமதி மேலும் குறைவடையக்கூடும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.5 குப்பைத் தொட்டிகளைப் பகிர்ந்தளித்தல்

மேல் மாகாண உதவி ஆணையாளரின் 2013 திசெம்பர் 02 ஆம் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தலின் படி காசிற்கும் மாற்றுத்திறனாளிகள், குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுவதற்காக பெறுமதியில் 50% உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்தும் அடிப்படையில் 20 லீற்றர்கள் கொள்ளவுடனான 200 குப்பைத் தொட்டிகள் 2013 நவம்பர் 28 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) குப்பைத் தொட்டிகளுக்காக உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய 50% ஆன ரூபா 33,560 தொகையான பணம் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2014 யூன் 30 ஆம் திகதி கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பத்தின் போதும் குப்பைத் தொட்டிகள் எதுவும் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் குப்பை முகாமைத்துவ தேசிய நிகழ்ச்சித்திட்டம் சபை அதிகாரப்பகுதியில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.6 களஞ்சியக் கட்டுப்பாடு

(i) களஞ்சியத்திற்குப் பெற்றுக்கொள்ளப்படும் சகல பொருட் பெறுவனவுகளும் பதியப்படுவதன் மூலமும் விநியோகங்கள் விநியோகப் பற்றுச்சீட்டின் மூலமும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் காகிதாதி விநியோகங்கள் எவற்றிற்காகவும் விநியோகப் பற்றுச்சீட்டும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சபை நிதியத்தில் ரூபா 100,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 479 நூலகப் புத்தகங்களுக்காக களஞ்சியப் பெறுவனவுகள் அல்லது விநியோகிப்புப் பட்டியல்கள் எழுதப்பட்டிருக்கவில்லை.

**3.7 தீர்க்கப்படாத கணக்குகள்**

2006 ஆம் ஆண்டின் போது பாலிந்தநுவர பிரதேச சபை மற்றும் அகலவத்த பிரதேச சபை என ஒதுக்கப்பட்டு வேறான ஓர் அலகாக கூட்டமைக்கப்படுகையில் காணப்பட்ட ரூபா 6,166,799 தொகையான பெறவேண்டிய மீதியையும், ரூபா 8,862,872 தொகையான செலுத்தப்பட வேண்டிய மீதியையும் அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அம் மீதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீடு
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு